அறிவிப்பு – 1

ஏழை எளிய மக்களும் சத்துள்ள பால் அருந்திட ஏதுவாக, ரூபாய் 10/– விலையில் 225 மில்லி லிட்டர் பால் பாக்கெட் அறிமுகப்படுத்தப்படும்.

அறிவிப்பு – 2

ரூபாய் 3 கோடியே 97 லட்சம் செலவில், இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற 5 ஆயிரத்து 439 பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு அரை லிட்டர் பால் விலையின்றி வழங்கப்படும்.

அறிவிப்பு – 3

ரூபாய் 1 கோடியே 15 லட்சம் செலவில், இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போலவே, ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கும் மருத்துவ வசதி மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நடைமுறைபடுத்தப்படும்.

அறிவிப்பு – 4

ரூபாய் 5 கோடியே 70 லட்சம் செலவில், சென்னை மாநகரில் நுகர்வோர் நலனுக்காக, 115 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், பாலகங்களாக மாற்றி அமைக்கப்படும்.

அறிவிப்பு – 5

ரூபாய் 1 கோடியே 40 லட்சம் செலவில், தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில், பணிபுரியும் 28 ஆயிரம் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சீருடைச்

செலவு மற்றும் தையற்கூலி ஆகியவை கூடுதலாக ரூபாய் 500 உயர்த்தி வழங்கப்படும்.

அறிவிப்பு – 6

ரூபாய் 37 லட்சத்து 50 ஆயிரம் செலவில், 50 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு மின்னணு பால் பரிசோதனை கருவிகள் வழங்கப்படும்.

அறிவிப்பு – 7

ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில், சேலத்தில் நாளொன்றுக்கு 6 ஆயிரம் லிட்டர் திறன் கொண்ட புதிய ஐஸ்கிரீம் தொழிற்சாலை நிறுவப்படும்.

அறிவிப்பு – 8

ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில், விருதுநகர் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட கால்நடைத் தீவன தொழிற்சாலை நிறுவப்படும்.

அறிவிப்பு – 9

ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில், தருமபுரி ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் திறன் கொண்ட புதிய தாது உப்பு கலவை தொழிற்சாலை நிறுவப்படும்.

அறிவிப்பு – 10

ரூபாய் 3 கோடி முதலீட்டில், திண்டுக்கல், விருதுநகர், தருமபுரி மற்றும் சிவகங்கை மாவட்ட ஒன்றியங்களில் தலா 3 புதிய பாலகங்கள் வீதம் 12 பாலகங்கள் அமைக்கப்படும்.

அறிவிப்பு – 11

ரூபாய் 20 இலட்சம் செலவில், 120 புதிய சங்கங்களுக்கு 480 பால் கேன்கள் வழங்கப்படும்.

அறிவிப்பு – 12

ரூபாய் 1 கோடியே 90 லட்சம் செலவில், சேலம் பால்பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்படும்.

அறிவிப்பு – 13

ரூபாய் 1 கோடியே 77 லட்சம் செலவில், திருநெல்வேலி பால்பண்ணைக்கு புதிய உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

அறிவிப்பு – 14

ரூபாய் 41 லட்சம் செலவில், விழுப்புரம்–கடலூர் மாவட்ட ஒன்றியம், சேத்தியாதோப்பு பால் குளிரூட்டும் நிலைய உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

அறிவிப்பு – 15

ரூபாய் 63 லட்சம் செலவில், திருச்சி பால்பண்ணைக்கு புதிய உபகரணம் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

அறிவிப்பு – 16

ரூபாய் 30 லட்சம் செலவில், தருமபுரி பால்பண்ணைக்கு தேவையான புதிய உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

அறிவிப்பு – 17

ரூபாய் 1 கோடியே 16 லட்சம் செலவில், தஞ்சாவூர் ஒன்றியத்தில் புதிய கால் நடை தீவன சேமிப்பு அறை மற்றும் பட்டுக்கோட்டை பால் குளிரூட்டு நிலைய கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு – 18

ரூபாய் 94 லட்சம் மதிப்பீட்டில், திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் வேலூர் பால்பண்ணைக்கு தேவையான புதிய உபகரணங்கள் நிறுவி, உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

அறிவிப்பு – 19

ரூபாய் 5 கோடியே 15 லட்சம் மதிப்பீட்டில், திருவண்ணாமலை பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலைக்கு தேவையான புதிய உபகரணங்கள் நிறுவப்படும்.

அறிவிப்பு – 20

ரூபாய் 3 கோடியே 16 லட்சம் செலவில், அம்பத்தூர் பால்பண்ணைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

அறிவிப்பு – 21

ரூபாய் 2 கோடியே 10 லட்சம் செலவில், மாதவரம் பால்பண்ணைக்குத் தேவையான புதிய கொதிகலன்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு – 22

ரூபாய் 6 கோடியே 76 லட்சம் செலவில், சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திறன் அதிகரிப்பு, 5 புதிய

அதிவிரைவு பேக்கிங் இயந்திரங்கள் மற்றும் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு பால் குளிர்விப்பு அறை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**அறிவிப்பு – 23**

ரூபாய் 60 லட்சம் செலவில், திண்டுக்கல் மற்றும் கோயம்புத்துார் ஒன்றியங்களில் 5,000 லிட்டர் திறன் கொண்ட இரண்டு புதிய தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்கள் அமைக்கப்படும்.